# தெளிவு

THELIVU - YOUTHS OF JAFFNA ARCHDEACONERY CHURCH OF CEYLON


"ஒருவன் எந்தளவு தன்னில் ஒன்றித்து உள்ளத்தில் தெளிவு பெற்றிருக்கிறானோ அந்த அளவு அதிகமானவற்றையும் மேலானவற்றையும் எளிதாகப் புரிந்து கொள்கிறான். ஏனென்றால் அவன் இறைவனில் இருந்து அறிவின் தெளிவைப் பெறுகிறான்."





## நீதியை பிரிக்கும் சுவர்களை தகர்த்தெறிய வேண்டும்

– கொழும்பு பேராயர் –

வளரும் வறுமைக்கு எதிரான கோரிக்கைகளுக்கும், வாக்குறுதிகளுக்கும், மாறான உண்மை நிலையில் பாரிய மற்றும் குறிப்பிடத்தக்களவான விகிதாசாரம் இலங் கையர்களாகும். வறுமையானது கொடுமையானதும், நீதியற்றதும், நியாயப்படுத்த முடியாததுமாகும். இன முரண்பாட்டுடன் சமகாலத்தில் தீர்வு காணப்படல் வேண்டும் என்பதுடன் இது சமாதானத் தூண்டலின் உள்ளார்ந்த பாகமாக காணப்படல் வேண்டும். வறுமை ஒழிப்பானது மீள் புனரமைப்பை உள்ளடக்குமெனினும் அதனையும் விட அதிகமானது. என கொழும்பு பேராயர் டூலீப் டி சிக்கேரா சுற்றுமடலில் தெரிவித்தார்.

மேலும் விபரிக்கையில்,

மறக்கப்பட்ட வன்னியின் வறியவர்கள், துஷ்பிரயோகம் செய் யப்பட்ட பெருந்தோட்ட வறிய வர்கள், தெற்கின் புறக்கணிக்கப் பட்ட வறியவர்கள் மற்றும் உரிமை கள் மறுக்கப்பட்ட நகர வறியவர் களுக்கு நீதி தேவை. விடுபட்ட அநாதைகள், விதவைகள் மற்றும் முதியவர்களை ஏற்று ஆதரவுக் கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வறியவர்களின் நெருக்கடி நிலை இரங்கலை எதிர்பார்க் கின்றது. வேறுவிதமான நீதியான போர் வறுமைக்கு எதிராக பிரகடனப் படுத்தப்படல் வேண்டும். அதிகா ரத்துவ சிவப்பு பட்டி, திறமையற்ற, வீண் மற்றும் போக்குச் சொல்லல், உலகமயமாக்கலின் எதிர் விளைவு கள் மற்றும் தனியார் மயப்படுத்தல், மற்றும் முக்கியத்துவத்தின் கொள்கையும் நிதிகள் அனைத்தும் இவ்விடயம் தொடர்பாக மீள்மதிப்பு செய்யப்படல் வேண்டும். பொருளாதார உறுதிநிலைக்கும் தகுதிக்கும் இட்டுச் செல்லும் உடனடி தணிப்புதவி திட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும்.

வறுமையை கணக்கெடுக்காது விடின் அது மேலும் வறுமைக்கு எதிராய் நிற்பதும், துஷ்பிரயோகிப்ப தாயும் அமையும்.எமது பல்கலைக் கழகம், பாதாள உலகம், ஐந்து நட்சத்திர விடுதி, வீதிகள் அல்லது பொலிஸ் நிலையங்களிலாயினும் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர் களிலிருந்து நீதியைப் பிரிக்கும் சுவர்களை தகர்த்தெறிய வேண்டும்.

## நூல் வெளியீடு

அருட்திரு சேவக் ஐ. ரி. இயேசுசகாயம் (சின்னண் ணன்) அவர்களின் வாழ் வும், திருப்பணியும் அடங் கிய வாழ்க்கை வரலாற்றுப் புத்தக வெளியீடு எதிர் வரும் 30-03-2003 அன்று மாலை 3.30 மணிக்கு மருதனார்மடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில் இடம் பெறும். இந்நாளில் அருட் திரு சேவக் எஸ். எஸ். செல்வரட்ணம் (பெரியண் ணன்) நினைவாகவும், அவர் தம் வாழ்வுக்கும், திருப்பணிக்குமாக இறை வனுக்கு நன்றி கூறும் நற்கருணை வழிபாடும் இடம்பெறும்.

## இலங்கை திருச்சபையில் புதிய திருப்பம்

மகளீர் உரிமை பற்றி பேசும் இக்கால கட்டத்தில் பெண் குருத்துவத்திற்கு கிடைத்த அங்கீகாரத்தை இலங்கை திருச்சபையினால் நிறைவேற்றப்படுகிறது. இலங்கை திருச்சபையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருநிலைப்படுத்தும் வழிபாடு கொழும்பு வாழும் மீட்பர் பேராலயத்தில் மார்ச் 2ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு ஆயர் டூலீப் டி சிக்கேரா ஆண்டகை தலைமையில் நடைபெற்றது.

இவ்வாராதனையில் உதவித் திருப்பணியாளராக 4 பெண்கள் திருநிலைப்படுத்தப் பட்டார்கள். அவர்கள் திருமதி மாலினி தேவானந்த, திருமதி குணவதனி பரிமளச்செல்வன், திருமதி குளோறி ஜெயராஜா, செல்வி மயூராவதி சந்திரிக்கா ஆகியோர் ஆவர். இவர்கள் முன்னெடுத்துள்ள பணி சிறக்க தெளிவு வாழ்த்துகின்றது.

## பணித்தளங்களில்.....

### குருக்கள்

புதிய திருப்பணியாளர்களை 21.12.2002 அன்று திருநிலைப் படுத்தப்பட்டது. இவர்கள் பணிபுரியுந் தளங்களாவன: வண. நிரோசன் டிமேல், கிறிஸ்துநாதர் ஆலயம், தெகிவளை. வண. இந்திக்க பெரேரா, பரி. இம்மானுவேல் ஆலயம், மொறட்டுவ. வண. போல். பிரியந், கொட்டகல. வண. ஞான காருணியன், பரி.யோவான் ஆலயம், வாழைச்சேனை. வண. ஸ்ரீபன், பொறுப்புரிமைக்குரு நவீட் பாடசாலை கைதடி. இவர்கள் பணி சிறக்க தெளிவு ளவாழ்த்துகின்றது.

### உதவிக்குருக்கள்

உதவித் திருப்பணியாளர்களை 29.12.2002 அன்று சகல பரிசுத்தவான்களின் ஆலயம், காலியில் நடைபெற்றது. அவர்கள் பணித்தளங்கள்:

வண. லலித், யாழ்ப்பாணம். வண. திருக்குமார், வன்னி. வண. கிருஷ்ணமூர்த்தி, பூண்டுலோயா. வண. சிறிதரன் போல், மஸ்கெலியா. வண. சாகரபெரேரா, நுகேகொடே. வண. விக்ரர் நவரட்ணம், கண்டி. இவர்கள் பணி சிறக்க தெளிவு வாழ்த்துகின்றது.

### பணியாளர்கள்

புதிதாக யாழ். குருமுதல்வர் பிரதேசத்தில் பணியாற்ற வந்த பணியாளர்கள்: சகோதரன் கிளே பிரபாகரன், பளை. சகோதரி கமலேஸ்வரி, தண்ணீயூற்று. இவர்கள் பணி சிறக்க தெளிவு வாழ்த்துகின்றது.

## ஆன்மீக ஐக்கியத்தில் சமாதானத்தை வளர்ப்போம்



கிறிஸ்தவ ஐக்கியம் வளர எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே நோக்கில் இயேசுவின் திரு வதனத்தை திருப்பித் திருப்பி நோக்கும்போது எமக்குள்ளே ஐக்கியம் வளரும். இந்த ஐக்கியம் எமது சொந்த செயலால் வரும் என்பது இல்லை. இறைவனால்தான் தர முடியும். ஆனால் நாம் அதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

இயேசு பிதாவை நோக்கி இடைவிடாது செபித்தார். அதைப்போல் நாமும் செபத்தில் தரித்திருக்க வேண்டும். அவரை அவராக ஏற்றுக் கொண்டு உடையாடலில் ஈடுபட வேண்டும். ஒதுக்கப்பட்டோருக்காக நீதி சமாதானத் திற்காக ஒன்றித்து உழைக்க வேண்டும். இவையே ஐக்கியத்தை வளர்க்கும்.

இந்த முயற்சிகளில் சோர்வு கள், களைப்புக்கள், எதிர்ப்புக்கள் வரும். அவற்றை எதிர்கொண்டு செல்ல அழைக் கப்பட்டுள்ளோம்.

இவ்வாறு யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை 25-01-2003 அன்று யாழ். சிற்றி மிஷன் (CSI) ஆலயத்தில் நடைபெற்ற ஐக்கிய ஒன்றிப்பு வழிபாட்டில் மறையுரை யாற்றினார்.

## பலவீனப்பட்டோரின் காப்பகமாக திகழும் கருணாநிலையம்

– யாழ். குருமுதல்வா –

கிளிநொச்சி - கருணா நிலையம் புனரமைக்கப்பட்டு 12.02.2003 அன்று திறப்பு விழா நடைபெற்றது. இதில் யாழ்-வன்னி அங்கிலிக்கன் திருச்சபை மக்களும், அழைக்கப் பட்ட சிறப்பு பிரதிநிதிகளும் காலை 11 மணிக்கு நடைபெற்ற வழிபாட் டில் கலந்து கொண்டனர்.

இதில் யாழ். குருமுதல்வர் வண. பிதா. S.P. நேசக்குமார் அடிகளார் திருப்பலி ஒப்புக்கொடுத்து அவர் மறையுரையாற்றும்போது எசேக்கியேல் தீர்க்கனின் நூலில் இருந்து கடவுள் சிதறுண்ட மக்கள் அனைவரையும் ஒன்றாக இணைத்து பராமரிக்கும் பணிக்காக எசேக்கியல் தீர்க்கனை அழைக் கின்றார். நலிவுண்டு, துரத்துண்டு, காயப்பட்டு தேடுவாரற்று, பலவீனப் படுத்தப்பட்டு அநாதரவான நிலை யில் இருந்த மந்தைகளை தேடிச் சேர்க்கும் பணிகளையே இறைவாக் கினரிடம் ஒப்படைத்தார்.

அவ்வகையில் செல்வி கட்சின்ஸ் அம்மையார் தனது ஆசிரியர் பணியை ஆற்றி ஓய்வு பெற்றாலும் கடவுளின் பணியில் இருந்து ஓய்வு பெறவில்லை. யாழ்ப்பாணத்தில் ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்ற பின்னர் கிளிநொச்சிக்கு வந்து பாவனை அற்று காடாக காணப்பட்ட பிர தேசத்தை துப்பரவு செய்து அங்கு அநாதரவான, கைவிடப்பட்ட, பலவீனப்படுத்தப்பட்ட, சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டிருந்த பெற்றோர்களால் ஏற்றுக்கொள்ளப்படாதிருக்கின்ற பெண்பிள்ளைகளை பராமரிப் பதற்கான ஒரு இல்லத்தை உருவாக் கினார். அது கருணையற்ற மக்க ளுக்கு கருணை வழங்கும் இடமாக மாறியது. இதைத்தான் ஆண்டவர் இயேசுவும் ஆற்றுமாறு எம்மிடம் அழைத்தார்.

மத்தேயு 25ம் அதிகாரத்தில் இயேசு கூறியதாவது "இந்த சிறியவர்களுக்கு நீங்கள் எதை செய்கின்றீர்களோ அதையே நீங்கள் எனக்கு செய்கிறீர்கள்" என்றார்.

குறிப்பாக சிறுவர்கள் பசியாக இருக்கும்போது ஆகாரமும், தாக மாக இருக்கும்போது பானமும், நிர்வாணமாக இருக்கும்போது உடையும், கவனிப்பற்று இருக்கும் போது உதவியும் வழங்குபவரே இயேசுவின் கூற்றுக்கு செவிசாய்க் கின்றார். அந்த அழைப்புக்கு அன்னை செவிசாய்த்தவராக காணப்படுகின்றார்.

யுத்தத்தின் காரணமாக இடியுண்டு இடம் பெயர்ந்து ஜெய புரப்பிரதேசத்தில் பெண்கள் இல் லத்தை நடத்தியபோதிலும் இந்த கட்டடத்தை புனரமைக்கும் பணியை செய்ய வேண்டுமென நாம் முயற்சித்தோம். அதற்கு நிதி பெரும் தடையாக அமைந்தது. எம்மிடம் காணப்பட்ட சிறிய தொகையைக் கொண்டு நாம் இந்தப் பணியை ஆரம்பித்தோம். ஆரம்பிக்கும்போது எதிர்பாராத விதங்களில் நிதிவளங்கள் நன் கொடையாக கிடைத்தது. இதன் மூலம் அன்னையின் நம்பிக்கையின் ஆவியும், உற்சாகத்தின் ஆவியும் விடாமுயற்சியின் ஆவியும் இன்னும் இங்கு குடி கொண்டிருப்பதை நாம் உணர்ந்தோம்.

நம்பிக்கையற்ற மக்களுக்கு நம்பிக்கையாளராகவும், சோர்ந்து போன எங்களுக்கு உற்சாகமும்,

(4ம் பக்கம் பார்க்க)



புனரமைக்கப்பட்ட கருணாநிலைய அலுவலகமும், விருந்தினர் விடுதியையும் யாழ். குரு முதல்வர் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும், பெண்கள் விடுதியை திருமதி தம்பிராஜா போதகர் அம்மா (நவஜீவனம்) திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், புதுப் பொலிவுடன் காட்சி அளிக்கும் பரி. பவுல் ஆலயத்தை மூன்றாம் படத்திலும், அவ்வாலயத்தில் யாழ். பிரதேச குருக்கள் வழிபாடு நடத்துவதையும் நான்காம் படத்திலும் காண்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தெளிவு
THELIVU - YOUTHS OF JAFFNA ARCHSEACONERY CHURCH OF CEYLON

# முத்துக்கள் மூன்று

## தெளிவுரை

சுதந்திரம், விடுதலை, சமாதானம் எல்லோர் எதிர்பார்ப்பும் பேச்சளவில் அலங்கார வார்த்தைகளாய் இன்றும் ஒலிக்கின்றது. இதற்காக குரல் கொடுப்போர் ஒரு சாராரும் கிடைத்தால் பெறலாம் என மறுசாராரும், குழப்பத்தில் குளிர்காய நினைப்போரும், பல்வேறு தளங்களில் நின்று உழைப்போரும் நம் நாட்டில் தொடர் செயல்களாகும்.

ஆனால் எம் வாழ்வை இறைவார்த்தை தெளிவுடன் மீட்டுப் பார்க்க மீண்டும் ஓர் ஆண்டு பிறந்துள்ளது. திட்டங்கள், தீர்மானங்கள், எதிர்பார்ப்புக்கள், செயல்படுவதில் எம் பங்கு என்ன? 'உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள், உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்' (மத் 5:44) என்ற இறைவார்த்தையை செயல் வடிவமாக காட்டி நின்றால் சமாதான ஒளியை நாம் காணலாம்.

வியாபார சமாதான விடுதலையை, சுதந்திர குடிபோதை சுகபோகத்தையா எதிர்பார்க்கிறீர்கள், திருப்தி கொள்கிறீர்கள். 'உன்னைப்போல் உன் அயலானை நேசி' 'உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக' 'சமாதானத்தின் கருவியாக மாறுங்கள்' என்ற வார்த்தை வடிவம் செயல் பெற வழியேது?

எங்கும் எதிலும் போட்டி பொறாமை பதவிகள் மோகம், பட்டங்கள் தேடல், பணமூட்டை கட்ட முதலைக் கண்ணீர் வடிக்கும் வழிகாட்டிகள் மட்டில் விழிப்பாய் இருந்து உண்மைக்குச் சாட்சியம் பகரும் போது நீங்களும் இறைசாட்சிகளே! நசுக்கப்பட்டோருக்காய் செயல்படும்போது நீங்களும் இறைசாயல்களே! எங்கோ இருந்தவரெல்லாம் புதிய வியாபார சமாதானத்தை சமாதானம் எனக் கோசமிடும் போது மௌனித்திருந்தால் நீங்களும் சாத்தானின் சீடர்களாய் ஆவீர்கள் அன்றோ. இல்லிடமற்று அன்று மட்டும் அலையவில்லை கிறிஸ்து இன்றும் எம்முன்னே அலையும் உறவுள்ள அனாதை வடிவில் கிறிஸ்துவின் சாயல்கள் உரிமைக்காய் அலைகின்றது. உன்னைப் போல உன் அயலானில் கிறிஸ்துவின சாயலைக் கண்டுணர்ந்தால் போலிகள், சுரண்டல்கள், கையூட்டலில் இருந்து காப்பாற்றி உண்மைக்கு சாட்சியம் பகரும் போது விடுதலையின் ஒளியில் இறைதரிசனத்தைக் காணலாம்.

திருச்சபை என்பது இறைமக்களின் கூட்டம். இறைமகனாக இவ்வுலகிற்கு வந்த கிறிஸ்து இயேசு தம் சீடர்களினூடாக இவ் இறைமக்கள் கூட்டத்தை கூட்டினார். இறைமகனாக வந்த அவரது நோக்கம் அனைத்து மனுக்குலத்தினையும் இறைமக்களாக்குவதாகும். எனவே திருச்சபை என்பது இறைமக்களின் கூட்டம் மாத்திரமன்று, அது அனைத்து மனுக்குலத்தையும் இறைமக்களாக்கும் கூட்டமாகும். இந்த இறைமக்களின் பணி விலையேறப்பெற்ற முத்துக்களுக் கொப்பானது. அவற்றினை மூன்று பெரும் முத்துக்களாக வகுத்துக் காணலாம். அவை (Mission ) தூது, (Vision ) வெளிப்பாடு, (Action ) செயல்பாடு என்பன.

வண. வீ. ந. தர்க்குலசிங்கம்
விரிவுரையாளர்
இறையியல் கல்லூரி
மருதனார்மடம்

(Mission ) இதன் பொருள் தூது செல்லும் பணி. இத்தூதுப்பணி இறைவனின் செய்தியை ஏற்றுச்செல்லும் பணியாகும். இறைமக்கள் என்பது இறைவனைப்பற்றிய அறிவு பெற்றவர்கள். இந்த அறிவு கிறிஸ்து யேசு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட முத்தாகும். இந்த அறிவினைப் பின்வருமாறு விளக்கலாம். நம்மைப் படைத்துக் காத்து வழிநடத்தும் இறைவன் பிதாவுக்கொப்பானவர். அவர் அனைத்து மனுக்குலத்தையும் தன் பிள்ளைகளாக ஏற்று உறவு கொள்வதற்கு விரும்புகிறார். இந்த உண்மையை மக்கள் அறியாது, தவறிய போதிலும், அவர்களை மீட்டு இரட்சித்து தன் உறவுக்குப் பாத்திரராக மீண்டும் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாயிருக்கிறார். நித்திய வாழ்வு உண்டு என்பதனையும் அவ் நித்திய வாழ்வில் அனைத்து மனுக்குலத்தையும் இணைத்துக் கொள்ளத் திருச்சித்தம் கொண்டார். அதற்காக வரலாற்றில் பல உடன்படிக்கைகளை ஏற்படுத்தினார். மோசே மூலமாக நடப்பித்த உடன்படிக்கை இன்றும் நம்மிடம் இருக்கிறது. இந்த உடன்படிக்கையினை இறைமைந்தனாக வந்த இயேசுக் கிறிஸ்து தன் சதையில் ஏற்று வாழ்வாக்கினார். வார்த்தை மூலம் வெளிப்பட்ட கற்பனை உடன்படிக்கை அவரது மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டது. ' அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கேற்ற மகிமையாகவே இருந்தது ' (யோவான் 1:14) இந்த முத்தான செய்தி திருச்சபைக்கு வெளியே எடுத்துச் செல்ல வேண்டியது. எனவே இது தூது என்ற பொருளில் அழைக்கப்படுகிறது. இத்தூது பற்றிய செய்தி இறைமக்களின் உதட்டில் அல்ல உள்ளத்திலிருந்து புறப்படும் முத்தாக இருக்க வேண்டும்.

(Vision) வெளிப்பாடு என்பது பிதாவாகிய இறைவன் தம்மை வார்த்தையினாலும், உடன்படிக்கையினாலும் காலம் காலமாக வெளிப்படுத்தினார் என்ற உண்மையை உறுதிப்படுத்துகிறது. இறுதி வெளிப்பாடாக மனு மைந்தனாக கன்னிமரியின் மடியில் பிறந்தார். இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வரலாற்றில் நடைபெற்ற வரலாற்று உண்மை. இந்த நிகழ்வு வரலாற்றினை கிறிஸ்துவுக்கு முன் உள்ள காலம் என்றும் கிறிஸ்துவுக்குப் பின் உள்ள காலம் என்றும் பகுத்துக்காண செய்தது. கிறிஸ்துவின் புதுப்படைப்பின் செயல், மனமாற்றம் என்னும் நுளைவாயிலூடாக மக்களை இறையரசுக்குள் அழைப்பதுடன் ஆரம்பமானது. இதன் ஆரம்பம் இறையரசு பற்றிய போதனை, தீர்க்கதரிசனம் உரைத்தல், குணமாக்கும் பணிபோன்ற அரும் பணிகளினால் வெளிப்படுத்தப்பட்டது. இந்தப்பணியின் வெளிப்பாடு விலையேறப் பெற்ற முத்துக்கொப்பானது. இந்த வெளிப்பாடானது அனைத்து மனிதருக்கும் கிடைக்கும் வரை தொடரும் நிகழ்வாக இருக்க வேண்டும் என்பது கிறிஸ்துவின் திருச்சித்தம். எனவே அவர் தம் சீடர்களுக்கு அதனை வெளிப்படுத்தி திருச்சபை மூலம் அதனை நடப்பிக்கும்படி பணித்தார். இந்தப் பணியின் வெளிப்பாடு அன்று சீடர்களுக்கு கிறிஸ்துவினால் நேரடியாக வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் அது இன்று நமக்கு விசுவாசத்தினால் காணும் வெளிப்பாடாக இருக்கிறது. இந்த முத்தான வெளிப்பாடு விசுவாசிப்பதுடன் நின்றுவிடக்கூடாது. 'ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது' (யாக்கோபு 2:26) எனவே விசுவாசமானது செயல்பாடாக வெளிப்பட வேண்டும்.

(Action ) செயல்பாடு என்பது விசுவாசத்தின் முத்துப் போன்ற பரிசுத்தாவியின் செயல். இந்த செயல்பாடு அன்று கிறிஸ்துவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இறையரசு பற்றிய போதனை, தீர்க்கதரிசனப் பார்வை, குணமாக்குதல் என்பவற்றை ஜீவனுள்ள பணிகளாக விளங்கும்படி செய்ய வேண்டும். அனைத்து மக்களும் இறையரசின் பிள்ளைகளாக மாறும்வரை இப்பணியின் செயற்பாடுகள் தொடர வேண்டும் என்பது திருச்சபை நாயகன் கிறிஸ்துவின் திருச்சித்தம். எனவே கிறிஸ்துவை தலையாகவும் இறைமக்களைச் சரீரமாகவும் கொண்ட திருச்சபை கிறிஸ்துவின் முத்தான செயல்களின் கருவிகளாக (அவையவங்களாக) விளங்குகிறது. இந்த உத்தரவாதமானது செயல்பாடுகள் திருச்சபைக்கு பரிசுத்தாவியின் வல்லமையினால் கொடுக்கப்பட்டிருக்கிறது. சமுதாயத்தில் நல்மனமாற்றம் காணப்படுதல், புதுப்பித்தல், புதிய காட்சி, மக்களில் காணப்படும் ஒருமைப்பாடு என்பன இச்செயல்பாடுகளுக்கான அடையாளங்களாகும்.

இறையறிவாகிய தூதினை ஏற்று செல்லும்பணி. வெளிப்பாடாக வந்த கிறிஸ்து போதித்த இறையரசு பற்றிய போதனை, கிறிஸ்து இயேசு வரலாற்றில் நடப்பித்த பணியின் செயல்பாடுகள் இவை மூன்றும் ஒரே தளத்தில் காணப்பட வேண்டும். ஆனால் இன்று திருச்சபையில் முத்துக்கள்போல விலையேறப் பெற்ற இம் மூன்று செயற்பாடுகளும் பூரணப்படாத நிலையே காணமுடிகிறது. பிதா, சுதன், பரிசுத்த ஆவியாகிய திரியேக கடவுள் பற்றிய நம்பிக்கை திருச்சபையில் காணப்பட தூதுச்செய்தியாக விளங்கும் பிதாவாகிய இறைவனின் அன்பு, குமாரனாகிய கிறிஸ்து வெளிப்படுத்திய இறையரசில் காணும் நித்திய வாழ்வு, பரிசுத்தாவியின் வல்லமையினால் விளங்கும் வல்ல செயல்பாடுகள் சாட்சியாக விளங்க வேண்டும். எனவே திருச்சபைப்பணி முழுமைபெற இம் மூன்று முத்துக்களையும் தேடிப் பெற்று மகிழ்வோமாக.

*ஆக்கங்கள் எழுதுங்கள் தெளிவு கண்டு பிரசுரிப்போம்.*

**தெளிவு**
யாழ்.குருமுதல்வர் காரியாலயம்,
452, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

'விலை ரூ. 5/=

## உள ஒன்றிப்பை நோக்கிய பயணம்

ஒன்றிப்பினை நோக்கிப் பயணிக்கும் கிறிஸ்தவ சபைகள அண்மையில் இணைவின் தொடர்பு நிகழ்வாக ஒன்றிப்பு வாரத்தினை நினைவு கூர்ந்தார்கள். மனுக்குலத்தைப் பாவத்தினின்று மீட்க வந்த இயேசுவின் வருகையின் 2000ஆம் ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில் ஒன்றிப்பை நோக்கிய பாதையிலே நாம் மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கின்றோம். ஒன்றிப்பு எனச் சுட்டும்போது அங்கே "பிரிவு" உள்ளது என்பது அர்த்தமாகும். 'பிரிவு' உள்ள இடத்திலே தான் ஒன்றிப்பின் அவசியம் விளங்கப்படுகின்றது. இப்பிரிவினையானது யாரினாலே ஏற்பட்டது. இப்பிரிவின் அடிப்படைக் காரணம்தான் என்ன? என்ற சிந்தனையை நோக்கிய தேடல் ஒன்றிப்பினை ஏற்படுத்துவதற்குப் பதிலாக பிரிவினையினைத் தந்துவிட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. காலச் சக்கரத்தில் பிரிவுகள் நிகழ்ந்துவிட்டன. இப்பிரிவுகளால் தனது மக்கள் ஆன்மீகப் புதுப்பித்தலை அடைய இறைவன் சித்தம் கொண்டார். எனவே பழையனவற்றைப் பற்றிச் சிந்திக்காமல் இன்றைய நவீன உலகிலே எவ்வாறு இறையரசை நோக்கிப் பயணிப்பது என்பதே தேவையானதொன்றாகும். இவ் ஒன்றிப்பை நோக்கிய பயணத்திலே எம் ஒவ்வொருவரினதும் கடமைகளை உணர வேண்டியது அதை செயற் படுத்துவது அவசிய மானதாகும்.

ஒன்றிப்பை நோக்கிப் பயணிக் கின்றோம் என்ற நிலையிலிருந்து சற்று உயர்ந்து உள- ஒன்றிப்பை நோக்கிப் பயணிக்கின்றோம் என கருத்துருவாக்கம் அளிக்கின்றபோது அதன் அவசியத்தை எளிதில் புரிந்து கொள்வது இலகுவாக இருக்கும் என்பதில் ஐயம் எதுவுமில்லை. சபைகள் என்பது அவை மதங்களின் நிறுவனங்களல்ல மாறாக அவை இயேசு கிறிஸ்துவின் உடல்களாகவே கருதப்படுகின்றன. எனவேதான் தூய பவுல் அடிகள் தமது திருமடல்களிலே 'திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல்' எனப் பலமுறை அழுத்தம் கொடுக்கின்றார்.(கொலோ1:24,எபே1:23,5:24) எனவேதான் இயேசுவும், திருச்சபையை துன்புறுத்திய போது பவுலடியாரைப் பார்த்து 'ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்?' (தி.ப 9:4) எனக் கேட்கின்றார்.

**- பகலவன் -**

நவீன யுகத்தின் தேவையினை ஆழமாக உணருகின்றபோது உள ஒன்றிப்பு கிறிஸ்தவ சபைகளிடையே ஆழமாக வேரூன்ற வேண்டியதொன்றாக கொள்ளப்படுகின்றது. ஏனெனில் சபைகள் ஒன்றாகி ஒரே குலமாக மாறுவது மிகக்கடினமானதொன்று. அது மட்டுமன்று அது எதிர்பார்க்கப்படாத தொன்றும் ஆகும். ஆனால் உள ஒன்றிப்பு மலரும்போது ஒரே நோக்கமும் ஒரே மனமும் ஒரே செயற்பாடும் கொண்டமைந்த கிறிஸ்தவ சமூகமாக திகழ்வோம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

உள ஒன்றிப்பு என்னும் போது அது இலகுவான தொன்றல்ல என்பது உறுதி. விட்டுக் கொடுப்புக்களும், புரிந்துணர்வும், ஒற்றுமையும் இதற்கு மிக முக்கியமானவைகளாகும். அது மட்டுமன்றி அனைவரும் இது பற்றி ஆழமாக சிந்தித்து கருத்துருவாக்கங்களை அமைப்பது சாலச்சிறந்ததாகும். மேலும் இதன் அடிப்படையிலே பயனுள்ள வளம்மிக்க செயற்பாடுகளையும் அமைத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக் காட்டுகளாகப் பின்வருவனவற்றைக் கொள்ளலாம். சபைகளுக்கிடையிலான ஒன்றுகூடல்கள், கருத்துப் பரிமாற்றங்கள், பொது வழிபாடுகள், இன்றும் ஓர் சபையின் நிகழ்வுகளில் மறுசபையினர் கலந்து கொள்ள அழைத்தல், நாம் சபைகளால் வேறுபடினும் ஒரே நோக்கமும் செயற்பாடும் கொண்டவர்களாக விண்ணரசை நோக்கி இவ்வுலகிலே பயணிக்கின்றோம். என்ற கருத்தினை மக்களிடையே ஆழ வேரூன்றல் போன்றவைகளைக் கொள்ளலாம். இத்தகைய செறிவு மிக்க வளமுற்ற செயற்பாடுகள் எம் மத்தியில் வேற்றுமைகளையும் பிரிவினைகளையும் கிறிஸ்துவின் உடலைக் கூறு போடும் நிகழ்வினையும் களையும் என்பதில ஐயம் எதுமில்லை.

## உயிர் வலி

உயிர் பிரியும்
உயிர்வலியை
உணர்ந்திருக்கிறாயா
தேகத்தினுள் தீ
சோகம் பாடியதை
நீ கேட்டாயா ?

அங்கங்களின்
ஆகர்ஷிப்பில்
எரிமலையொன்றின்
எகிறிப்பை யதார்த்தமாய்
கண்டதுண்டா ?

இதயத்துள்
எரிகணை யொன்று பாய்ந்து
சிதருண்ட துகள்களின்
அஸ்தமன ஒலிகளை
கேட்டதுண்டா ?

மரண வேதனையின்
மறு வடிவத்தையும்
பிரசவத்தின் பின் நாள்
அவஸ்தையின் திடீர் விஜயத்தை
சந்தித்திருக்கிறாயா ?

அப்படியாயின்
எனிருப்பின் இடரையும்
மண்ணின் மரிப்பையும்
கேட்டுப்பார் ஒரு முறையேனும்
என் கண்ணின் புண்ணை நீ காண்
இழப்பின் அகலிப்பின்
அத்தியாயங்களை நீ வாசி
அப்போதுனக்கு வலியின்
வலி என்ன வென்று புரியும்....

ஓட்டமாவடி
**எம். பீ. நளீம்**

## தோழர்களே...!

உங்களுக்குள்ளே
உறங்கிக் கிடக்கும்
தனித்துவங்களைத்
தட்டியெழுப்புங்கள்

உங்களுக்குள்ளே
உருமறைந்திருக்கும்
ஆற்றல்களை
உசுப்பி விடுங்கள்

உள்ளங்களுக்குள்ளே
உறைந்து கிடக்கும்
கறைகளைக்
கழுவி விடுங்கள்

உங்களக்கு நீங்களே
உருவகித்துக் கொண்ட
சிறைகளை
சின்னாபின்னமாக்குங்கள்

தூக்கம் துக்கம்
துடைத்தெறியுங்கள்
நம்பிக்கையை நண்பனாக்கி
உண்மையை உடுத்திக்
கொள்ளுங்கள்

முயற்சியை
முகவுரையாக்கி
இயலாமைக்கு
முற்றுப்புள்ளியிடுங்கள்

விடியலின் கீற்று
உள்ளத்தில் உதிக்கும்
வெற்றியின் காற்று
நம் வாசலில் வீசும்.

- ஜே. எம். ரி. றொட்றிக் -

**"அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்" மத்.5:9**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தென்னிந்திய திருச்சபையின் குருவாக 50 வருடங்களுக்கு மேலாக ஆன்மீக பணியாற்றிவரும், இறையியல் களஞ்சியம் என்னும் காலாண்டு சஞ்சிகையின் பதிப்பாசிரியரும், பல ஆய்வுக் கட்டுரைகளையும் ஆன்மீக கட்டுரைகளையும் எழுதியும் தரமான ஆங்கில நூற் கட்டுரைகளையும் மொழி பெயர்த்தும், கிறிஸ்தவ ஆக்கப் பணிக்கு உதவியவரும், இலங்கை கிறிஸ்தவ கல்லூரி மருதனார் மடம் ஆரம்ப முதல் 18 வருட கால விரிவுரையாளரும், பல நூல்களை வெளியிட்டவருமாகிய வண. பிதா. டி.ஆர்.அம்பலவாணர் (M.A) அடிகளார் தெளிவுக்கு தந்த சிறப்புச் செவ்வி இதோ.**

**உங்கள் ஆன்மீக பணி வாழ்வு பற்றி........**

எனது தகப்பனாரும் தாயாரும் தம் இளவயதில் இயேசுவைத் தம் இரட்சகராக ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களாக வாழ்ந்தனர். எனது தாயார் உடுவில் மகளிர் கல்லூரியில் படிக்கும்போதே அங்கு பணியாற்றிய மிஷனரி அம்மாவின் போதனையினாலும், முன்மாதிரியான வாழ்க்கையினாலும் கவரப்பட்டு எந்த விதமான ஆதாயத்தையோ உலக நன்மைகளையோ கருதாமல் தன் சுய விருப்பத்தினாலேயே கிறிஸ்தவரானார். இதன் விளைவாக பல துன்புறுத்தல்களை, எதிர்ப்புக்களை அடைய வேண்டியிருந்தது. இருந்தும் தளராமல் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருந்தார்.



அனுபவத்தை நான் பணியாற்றிய சபைகளில் அமுலாக்க முடிந்தது.

**கிறிஸ்தவ நற்செய்தியை பரப்புவதில் நீங்கள் கையாண்ட வழிமுறைகள் எவை? இன்றைய காலத்தில் அவற்றை சபைகள் எப்படி முன்னெடுக்கலாம் என்று கருதுகிறீர்கள்?**

ஒரு சபையின் போதகர் மட்டும் தனிமையாக நற்செய்திப் பணியில் ஈடுபடுவது போதாது, மாறாக சபையாரை இந்த பணியில் முறைப்படி ஈடுபட அவர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டியது போதகரின் கடமை. நற்செய்தியைப் பறைசாற்றுவது தான் ஒரு சபையின் இதயத்துடிப்பாய் இருக்க வேண்டும். அக்கினி எரிவதனால் தான் அக்கினியாய் இருப்பதுபோல ஒரு சபை நற்செய்தி அறிவிப்பதனால் தான் திருச்சபையாய் விளங்குகிறது என்பார் எமில் புறுனர் (Emil Bruner) என்ற பெரியார்.

அனைவரும் ஆவலுடன் படிக்கத்தக்க வகையில் கவர்ச்சிகரமாக அச்சிட வேண்டும்.

இன்று அச்சுக்கள் மிக்க கவர்ச்சிகரமான முறையில் முன் னேறி வருகிறது. ஆகவே, ஆன்மீக வாழ்வு பற்றிய நூல்களை சிறந்த முறையில் மலிவு விலையில் அச்சிட்டு எல்லாச் சபைகளில் விநியோகித்தல் வேண்டும்

பிரசங்கத்தைக் கேட்பதி லும் பார்க்க அதே பொருளை அச்சில் வெளி வரும் ஒரு சிறிய நூலில் அல்லது துண்டுப் பிரசுரத்தில் வாசிக்கிற வர்கள் அதனை மீண்டும் வாசித்து மனதில் பதிய வைக்க, அதனை மற்றவர்களுக்கும் கொடுத்து, அதில் அடங்கிய கருத்துக்களை சேர்ந்து கலந்துரையாடி செபிக்கவும் உத வும்.

இத்தகைய ஆன்மீக நூல்கள் வாழ்க்கையோடு ஈடுபட்ட தாய் இருத்தல் வேண்டும். எங்கள் நோக்கம் இதில் அடங்கியுள்ள நற்செய்தி மக்கள் மனதை மாற்றி அமைக்க வேண்டும் என்பதே எனது கருத்து

**சமூக மட்டத்தில் பணியாற்றக்கூடிய தலைவர்களை கிறிஸ்தவ அமைப்புக்கள் எப்படி உருவாக்க வேண்டும் என்று கருதுகின்றீர்கள்........?**

இன்று நமது சமுதாயத்தில் கிறிஸ்தவ சபைகளில் மட்டுமல்ல, மற்ற துறைகளிலும் தகுந்த தலைவர்களைக் கண்டுபிடிப்பது மிக்க கடினமாக இருக்கிறது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். படிக்கிறார்கள், பட்டங்கள் பெறுகிறார்கள், பதவி மோகம் பிடித்தவர்களாய் அலைகிறார்கள். ஆனால் தலைமைத்துவம் இல்லை. எனினும் இன்றைய தேவை நல்ல தலைவர்களே!

விலும் கிறிஸ்தவர்களால் தொடங்கப் படுகின்றன. குறிப்பாக கத்தோலிக் கத் திருச்சபை இத்தகைய ஆன்மீக இல்லங்களைத் தொடங்குவதோடு நின்றுவிடாமல் ஆன்மீக தியானத் தினால் பெறுகின்ற தெய்வீக ஆற்ற லைக் கொண்டு ஏழை மக்கள் புறக்கணிக்கப்பட்ட மக்கள் மத்தியில் தகுந்தவாறு நற்பணியில் ஈடுபட வேண்டும். ஆன்மீக வாழ்வு என் பதின் கருத்து இதுதான். நமதாண் டவர் பரம பிதாவுடன் அடிக்கடி இணைந்து உரையாடி நீண்ட நேரம் செபித்து வந்தார். அதன்பின் சுற்றித் திரிந்து மக்களுக்கு இறை பணி யாற்றி வந்தார். இறைவனுடன் இணைந்து வாழ்ந்தால் ஆன்மீக வாழ்வு. இறைவனைவிட்டு உல கோடு இணைந்து வாழ்ந்தால் பாவ வாழ்வு. நாங்கள் இறைவனுக்காக வாழ தியானம் நல்ல வழிமுறை யாகும்.

**குருத்துவ அழைத்தலுக்கான தூண்டல் இன்றைய காலத்தில் ஏற்படுத்தும் சவால்கள் எவை? அவற்றை எதிர் கொள்ள வழி..............?**

இன்று குருத்துவப் பணிக் கான பயிற்சி பெறவருகிறவர்கள், குருத்துவப்பணியை நாட்டில், மக்கள் ஈடுபடுபட்டிருக்கும் பல பணிகளில் இதுவும் ஒரு பணி. ஆனால் உரிய முறையில் நான்கு ஆண்டுகள் பயிற்சி பெற்ற பின் ஏதாவதொரு சபையிலோ அல்லது கிறிஸ்தவ நிறுவனத்திலோ வேலை கிடைப்பது நிச்சயம் என்ற நோக்கத்தோடுதான் பயிற்சி பெறுகின்றனர். படிப்பு முடிந்ததும் சில வெளிநாடுகளில் கூடிய சம்பளம் கிடைக்கும் என்று அறிந்ததும் இங்கிருந்து போய்விடு

மற்றும் சமூக விரோத செயல் களில் ஈடுபடவும் வாய்ப்பிருக்கிறது இவை திருச்சபைக்கு பெரிய அபா யத்தை கொண்டு வருகின்றது. எனவே குருக்கள் நன்றாக உரு வாக்கப்பட வேண்டும். குருத்துவம் ஒரு ஊதியம் பெறும் வேலையல்ல. மிக உன்னதமான வேலை, இதனை அர்ப்பண உணர்வுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

**உங்கள் ஆன்மீகப் பயணத்தில் மறக்கமுடியாத சம்ப வங்கள்?**

நான் ஆரம்ப காலத்தில் கோயி லுக்குப் போதல், வேதம் வாசித்தல், ஜெபம் செய்தல் மட்டும்தான் ஆன்மீகம் என்று கருதினேன். ஆனால் அதுமட்டும்தான் ஆன்மீகம் என்றல்ல அது ஆன்மீகத்தின் ஒரு பகுதி. நான் சமயத்தில் முதிர்ச்சி யடைந்து வருகின்றபோது இயேசு பிரான் என்ன விதமாக பலவீனர் களையும், நொந்தவர்களையும், தேடிச்சென்று பணி செய்தாரோ அது வும் ஆன்மீகம்தான். இதைத்தான் நான் எனது வாழ்க்கையில் செய்தேன்.

இயேசுநாதர் தனிமையை நாடிச் சென்று செபத்திலே தரித்திருந்து சீடர்களுடன் கிராமங்கள் தோறும் சென்று பணியாற்றியதுபோல நானும் என்னால் இயன்றளவு பணித்தளங்களில் பணியாற்றினேன். நாம் இறைவனிடம் பெறும் நன்மைகளை எமக்கென்று குறுக்கி சுயநலமாக வைத்திருக்காது பிறர் நலத்தில் அக்கறை கொண்டு தகுந்த முறையில் பணியாற்ற வேண்டும். இதைத் தான் எனது ஆன்மீகப் பயணத்தில் கண்டு கொண்டவையாகும்.

தனிமையாக இருந்து கொண்டு பிறர் பணிசெய்வதிலும் பார்க்க மற்றவர்களுடன் கூட்டுச் சேர்ந்து

# பட்டங்கள், பதவிகள் மட்டும் நல்ல தலைவர்களை உருவாக்கிவிடாது

வண. பிதா. D.R. அம்பலவாணர் -

இந்தியாவில் தெலுங்கு தேசத்தில் எல்லூர் என்ற மாவட்டத்தில் திருப்பணியாளராகப் பல சபைகளின் பொறுப்பையேற்று பணியாற்றி வந்த எனது தந்தை தனது சொந்த ஊராகிய புங்குடு தீவில் இத்தகைய கிறிஸ்தவப்பெண் இருக்கிறாளெனக் கேள்விப்பட்டு, இவரே தன் ஊழியத்திற்கு ஏற்ற துணையாயிருப்பரென உறுதியாக நம்பி அங்கிருந்து புங்குடுதீவிற்கு வந்து திருமணம் செய்தார்.

திருமணத்தின் பின் இருவரும் தெலுங்கு தேசத்திற்குப் போய் அங்கு எனது தாயார் தெலுங்கு மொழியைக் கற்று, என் தந்தையாரின் ஊழியத்தில் பெருந் துணையாயிருந்தார். எனது பெற்றோரின் வழிநடத்தலினால் நான் ஆன்மீக வாழ்வில் ஆர்வத்துடன் ஈடுபட்டேன். காலை மாலை செபஞ் செய்தல், குடும்ப செபத்தில் ஒழுங்காக ஈடுபடுதல், வேத வசனங்கள் குறிப்பாக சங்கீதங்களை மனனம் செய்தல், ஓய்வுநாட் பள்ளிக்கூடத்தில் தெலுங்கு மொழியில் பாடங்களைக் கற்பித்தபடியால் நான் சிறுவயதிலேயே தெலுங்கைக் கற்று வேதப்பாடங்களை நன்கு புரிந்து கொண்டேன். அகில இந்திய ஓய்வு நாட் பரீட்சையில் பிரதம வகுப்பில் நான் முதற் பரிசாக ஒரு வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றேன்.

என் சகோதரங்களுடனும், மற்றச் சபைப் பிள்ளைகளோடு அன்பாகப் பழகவும் ஏழைப்பிள்ளைகளுக்கு வேண்டிய உதவிகளை அன்புடன் செய்யவும் எனது தாயார் எங்களை வழிநடத்தினார். ஒவ்வொரு நாளும் என்னோடு படிக்கும் மாணவர்களுக்காகவும், நோயுற்றோருக்காகவும் செபஞ் செய்ய எனது தாயார் கற்றுக் கொடுத்தார். இதனால் எனது செப வாழ்வு வளர்ச்சி அடைவதற்கு ஏதுவாயிருந்தது. இறைவன் தந்த நன்மைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து அவர்களை மகிழ்விக்கவும் பழக்கப் பட்டேன்.

இதுவே உண்மையான ஆன்மீக வாழ்வு என நான் பிற்காலத்தில் உணர்ந்தபடியால், எனது கிறிஸ்தவ ஊழியத்திலும் இது அதிக பயனளித்தது. அனேகரை ஆண்டவரிடம் வழிநடத்த ஏதுவாயிருந்தது. எனது பெற்றோரின் நல்ல வழிநடத்தலினாலும், பரி. யோவான் கல்லூரியில் 1933 - 1942 ஆம் ஆண்டு வரை அங்கிருந்த ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரி னால் பெற்ற ஆன்மீகப் போதனையின் பெறுபேற்றினால் பின்னர் யாழ் கல்லூரியில் படிக்கும்போது நான் கிறிஸ்தவ வழிகளில் செயலாற்ற வாய்ப்புக்களைப் பெற்றமையால் கிறிஸ்தவப் பணியாளனாக வர வேண்டுமென என்னை முற்றாக ஒப் படைக்க உந்தப்பட்டேன். தூயஆவியாரினால் நான் வழிநடத்தப்பட்டதனால் இந்த

கடந்த 52 ஆண்டுகளாக திருச்சபைத் திருப்பணியில் ஈடுபட்டு வருகிறேன். நற்செய்தியைப் பரப்புவதில் பல வழிமுறைகளைக் கையாண்டிருக்கிறேன். இன்று பலரால் விரும்பப்படும் ஒரு வழிமுறை உரையாடல். சமய உரையாடல் மூலம் பலர் கிறிஸ்துவை நன்கு தெளிவாக அறிய முடிகிறது. அத்துடன், நற்செய்தியை பிறமதத்தினருக்கு அறிவிக்கமுன் நாங்கள் அவர்களின் கடவுள் நம்பிக்கையை அறிய வேண்டியது அவசியம், ஆகவே, உரையாடல் மூலம் நாம் அவர்களின் சமய நம்பிக்கைகளை ஓரளவு அறிவதற்கு ஏதுவாயிருக்கும். அதேவேளை நாங்களும் எங்கள் சமய நம்பிக்கைகளைத் தெளிவாக அறியவும் விளங்கவும் முடியும்.

உரையாடும்போது பிறரை கிறிஸ்தவர்களாக்க வேண்டுமென்ற நோக்கோடு உரையாடுவோமாகில் அவர்கள் அடுத்த முறை உங்களிடம் வரமாட்டார். நாங்கள் சாற்றமுனையும் நற்செய்தி எது? இயேசு தான் நற்செய்தி அவரைத்தான் நாங்கள் எங்கள் வாழ்வு மொழியாலும், வாய்மொழியாலும் மற்றவர்களுக்கு விளக்க அழைக்கப் பட்டுள்ளோம். "நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்" (யோவான் 10:10) இதை எங்கள் மனதில் வைத்து தூயஆவியாரின் வழிநடத் தலுக்கு ஏற்ப நற்செய்திப்பணியில் ஈடுபட வேண்டும்.

**ஆன்மீகத்தை படைப்பிலக்கிய வழிகளில் மக்கள் மனங்களில் சென்றடைய நீங்கள் கூறும் ஆலோசனை....**

எங்கள் வாழ்வை உடல் சார்ந்த வாழ்வு, ஆன்மா சார்ந்த வாழ்வு என இரண்டாகப் பிரிப்பது முறையல்ல என்பதே எனது கருத்து. ஆன்மா இறைவனின் விருப்பத்திற்கேற்ப முழுவாழ்வை வாழ வேண்டுமேயாகில், உடல் தேவை ஆன்மா நமது உடலை கருவியாக பாவிக்க விழைகிறது. இத்தகைய முழு வாழ்வைத் தரவே இயேசுபிரான் இவ்வுலகில் வந்துதித்தார்.

எனவே ஆன்மீக வாழ்வு என்றால் என்ன? இவ்வுலகில் அத்தகைய வாழ்வை வாழ வேண்டியது அவசியமா? சீரழிந்து வரும் இன்றைய சமுதாயத்தை சீராக்க, நாம் ஆன்மீக வாழ்வை வாழ வேண்டுமா? இத்தகைய கேள்விகளை இன்று பல புத்தி ஜீவிகள் கேட்கின்றனர். ஆகவே இவற்றைப் பற்றி நாம் ஆழமாக சிந்தித்து தூய ஆவியரின் துணையுடன் இன்றைய சூழலுக்கேற்ற முறையில்

ஒரு நிறுவனத்திற்கு, அல்லது ஒரு அமைப்பிற்கு, ஒரு திட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டுமென்ற ஆசை, கூடிய ஊதியம் பெற வேண்டுமென்ற வாஞ்சை, ஆனால் எடுத்த காரியத்தைச் செம்மையாகச் செய்ய வேண்டும். தாங்கள் பணி செய்து சீரடைய வேண்டும். தங்களுடன் பணி செய்வோரின் ஒத்துழைப்பை நாட வேண்டும். செய்வன திருந்தச் செய்வதற்கு மற்றவர்களின் அர்ப்பணிப்புத் தேவை என்ற உயர்ந்த நோக்கோடு தியாக மனப்பான்மையுடன் தங்கள் பொறுப்பில் தரப்பட்ட பணியை நிறைவுற தங்களை அர்பணித்து செயலாற்றும் தலைவர்கள் தேவை.

இத்தகைய தலைவர்கள் பள்ளியில் படிக்கும் சிறுவயதிலேயே பயிற்றப்பட்டவர்களாய் இருத்தல் அவசியம், இதனை நமது கல்வி நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், திருச்சபைகள், தங்கள் பணிகளில் இது முக்கியமானது என்பதை மறவாது, ஏற்ற முறையில் செயல்பட வேண்டும். இதுவும் தூயஆவியாரின் பணிகளில் ஒன்றாகும்.

**ஆன்மீகத் தேடலை, தியான வழிமுறைகள் மூலம் வழிகாட்டப்பட என்ன முறைகளை கையாளலாம். இவற்றிற்கு ஆச்சிரமங்கள் எந்த வகையில் பங்கேற்கலாம்?**

தேடல் என்பதை முதலில் நோக்கின் நமக்குத் தேவையான ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆவலுடன் தேடத் தொடங்குகிறோம் அல்லவா? அது எது? அதுதான் ஆன்மீகப் பெலன். இந்த ஆன்மீகப் பெலன் இல்லாவிட்டால் நமது உடல் வலுவற்றுப் போய்விடும். பயனற்ற அர்த்தமற்ற வாழ்வைத்தான் நாம் வாழ்ந்து வருவோம். நமது வாழ்வுக்கு ஒரு நோக்கம் ஒரு அர்த்தம் இறைவனால் தரப்பட்டிருக்கிறது. அதுதான் நம் வாழ்வை நிறைவாக்கும், அத்தகைய முழுவாழ்வு, உங்களுக்கு மட்டுமல்ல நாம் வாழும் சமுதாயத்தையும் வளமாக்கும்.

இன்று நமது சபைகள் வலுவற்று வளமற்று வெறும் கூட்டுறவுச் சங்கங்களாகத் திகழ் வதை நாம் மறுக்கமுடியாதல்லவா? இத்தகைய கருத்தற்ற சங்கங்கள் சமுதாயத்திற்கு ஒரு குறிப்பிட்ட செயலை மட்டும் செய்கிறது. அதைவிட ஆன்மீக வளத்தைக் கொடுப்பதில்லை.

ஆகவே, நமது சமூகம் ஆன்மீகம் நிறைந்த ஒளிமயமான சமூகமாகத் திகழ வேண்டும். இதனை விருத்தி செய்யும் நோக்குடன் தான், ரவீந்திரநாத் தாகூர், மகாத்மாகாந்தி, க. யேசுதாசன், வண. செல்வரத்னம் (பெரியண்ணன்) போன்ற தலைசிறந்த ஆன்மீகத் தலைவர்கள் ஆச்சிரமங்களைத் தொடங்கினார்கள். இன்றும் இந்தியாவிலும் சில தியான இல்லங்கள் ஆச்சிரமங்கள் வட இந்தியாவிலும் தென் இந்தியா

கிறார்கள். இப்படிப்பட்ட மனப்பாங்கு உடையவருக்கு திருச்சபையின் புதிய நோக்கை, புதிய உத்தி முறைகளை தகுந்த முறையில் வழிகாட்டாமையே மூல காரணம்.

இன்றைய நவீன யுகத்தில் பல்பரிணாம வழிகளில் பணியாற்ற வழிகாட்ட வேண்டும். அல்லது போனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றது. ஏனெனில் இன்றைய குருக்கள் ஆராதனை எடுத்தால் மட்டும்போதும் என்று கருதுவதினால் நற்செய்திப் பணி குறுகியதாக போய்விட்டது. ஆரம்ப காலத்தில் மிஷனரிமார் சமூக - சமயப் பணிகளை மதம் கடந்து செய்தார்கள். அதனால் நற்செய்தி பெரு வெள்ளமாகப் பாய்ந்தோடியது. அத்துடன் தன்னலம் கருதாமல் செய்தனர். இப்படிப்பட்ட பணிகளைச் செய்ய வளர்ந்து வரும் குருத்துவ சந்ததியினருக்கு வழிகாட்ட வேண்டும். தலைமைப் பீடங்கள் இதற்கு முன் வரவேண்டும். தலைவர்கள் தமக்குள் மோதிக் கொள்ளாது எதையும் தூர நோக்குடன் சிந்தித்து திட்டங்கள் வகுக்க வேண்டும். குருக்களுக்கு முறைப்படி பணியாற்ற கற்றுக் கொடுக்கவில்லை என்றால் சோம்பேறிக் குருக்கள் அதிகரிக்க வாய்ப்பிருக்கின்றது. ஆதனால் அவர்கள் திருச்சபை வளர்ச்சியில் அக்கறை கொள்ளாது தமது சொந்த வாழ்வில் அதிக அக்கறை கொண்டு தமது குடும்ப வாழ்வை மேம்படுத்த பணம் தேடுவதில் அக்கறை உடையவர்களாக இருப்பார்கள்.

செய்வதால் நிறையப் பலன்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். ஓரே இடத்தில் மட்டுமல்லாது பரந்து தேவையுள்ள இடத்தில் பணியாற்ற வேண்டும். இயேசு சொன்னார் "நான் பணிவிடை பெறவல்ல மாறாக பணிவிடை செய்யவே வந்தேன்" என்றார். இவற்றைத்தான் நான் எனது வாழ்வில் கண்டு கொண்டவை யாகும்.

**தெளிவு வாசகர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனைகள்..........?**

சமயம் சார்ந்த தெளிவு பத்திரிகையில் முற்று முழுவதும் சமயக் கருத்ததுக்களை கூறாது மற்ற மக்களுக்குத் தேவையான பொது விடயங்களையும், மற்றவர்களும் பயனடையும் கருத்துக்களையும் எடுத்துக் கூறல் நல்லது. அடுத்து தெளிவு வாசகர் தெளிவின் உள்ளடக்கமாக அமையும் விடயங்களை தாம்மட்டும் பெற்று அனுபவிக்காது மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். தெளிவு பத்திரிகை பிறருக்கு அறிமுகம் செய்து அதன் வளர்ச்சியில் பக்கபலமாக இருக்க வேண்டும். ஒரு பத்திரிகையின் வளர்ச்சிக்கு வாசகரே பெரும் பங்காற்ற வேண்டும். ஆகவே நீங்களும் அதனை செய்ய உங்களைக் கேட்டு தெளிவின் வளர்ச்சியில் இறைவனின் ஆசீர்வாதங்கள் என்றும் இருக்க வாழ்த்துகின்றேன்.

# வழிகாட்டல்

*அத்துறவியின் மாதபசைக் கண்டு உலகமே வியந்தது. ஆற்றலைக் கண்டு அதிசயித்தது. அறிவைக் கண்டு பெருமூச்சு விட்டது.*
*அவனுக்கு ஒரு நாள் வாழ்க்கை வெறுத்து விட்டது. மனைவி மக்களை மறந்து அவர் முன் போய் நின்றான்.*
*"என்னப்பனே வேண்டும்?"*
*"என்னை உங்கள் சீடரில் ஒருவனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்"*
*அவர் அவனைக் கூர்ந்து பார்த்தார். துறவிக்கான மனப்பக்குவம் அவனிடம் இல்லாதது தெரிந்தது.*
*"அப்பனேயூ உன்னிடம் துறவுக்கான மனப்பக்குவம் இன்னமும் கைகூடவில்லை. போய்விட்டு காலம் கனியும் போது வா. உன்னை ஏற்றுக்கொள்கிறேன்!" என்றார்.*
*அவனே பிடிவாதமாக நின்றான்.*
*ஓருகணம் யோசித்தான்.*
*"சரி என்னைத் தொடர்ந்து வா!" என்று நடக்கத் தொடங்கினார்.*
*வழியெலாம் இயற்கையின் களிநடம். அவன் ஆர்வத்துடனும் ஆனந்தத்துடனும் நாலாபக்கமும் பார்வையைச் சுழற்றிக் கொண்டு நடந்தான்.*
*குருவோ எந்தவித வயிப்புமில்லாமல் நிச்சிந்தையாக நடந்து கொண்டிந்தார்.*
*திடீரென ஒரு கதறல் கேட்டது. குரு திரும்பிப் பார்த்தார்.*
*அவன் ஒரு பள்ளத்தில் இடறி விழுந்திருந்தான்.*
*"புலனடக்கம் இல்லாத!!! புகழ் விரும்பி நீயூ!!! பாதை பார்த்து நடக்கத் தெரியாத உனக்கு ஒரு துறவா?!!! நீ மற்றவருக்கு எந்த வழியைக் காட்டுவாய்?"*
*குரு நடக்கத் தொடங்கினார். சிஷ்யனின் அலறல் பின் தொடர்ந்தது.*

**செம்பியன் செல்வன். குறுங்கதை நூலில் இருந்து**

"உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்" மத்.6:44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நிகழ்கால செயல்கள் எவை?

## காலத்தை மதிக்க நேரத்தை பயன்படுத்துவோமா?

உலகத்தில் எத்தனையோ வளர்ச்சி அத்தனைக்கும் மனித உழைப்புத்தான் காரணம்.அவர்கள் காலத்தை வீணாக்காது உயர் நோக்கோடு எதிர்கால சந்ததியின ருக்காக செயற்பட்டு இருக்கின் றார்கள். செயற்பட்டும் வருகின் றார்கள்.

காலத்தை வீணாக்குவது என்பது வாழ்வில் ஏற்படுகின்ற பெரிய இழப்பாகும். இதனை ஈடு செய்ய யாராலும் முடியாது. அந்த வகையில் காலம் உயிரைவிட மதிப்புள்ளது. என்பதை அறிந்து கொண்டு எமது வாழ்வை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

"காலத்தின் நிலையை அறிந்து கொள்இ காலமே உன் உயிர் அதை வீணாக்குவது உன்னையே நீ கொலை செய்து கொள்வது போலாகும்" என்பார் ஜேம்ஸ் அலன்-

எம்மில் பலர் எதற்கெடுத் தாலும் "நேரமில்லை" என்ற சொற்பதத்தை பாவிப்பதனையும் ஆக்கபூர்வ செயற்பாடுகளில் ஈடுபடாமலும் எமது வாழ்வியலுக்கு தேவை யானவற்றில் பங்கு பற்றாமலும் வாழ்ந்து வருகின் றோம். இவை எமது திடகாத்திரமற்ற உளத்தை வெளிப்படுத்துகிறது.

மனக்கட்டுப்பாடு அற்ற மனிதர்கள்தான் எதை, எப்படி, எங்கு செய்வது என்று தெரியாமலும் வாழ்வை திட்ட மிடாமலும் இருக்கின்றார்கள். இவர்களின் எல்லா செயல்களுமே தோல்வியாகத்தான் அமைகின்றது.

நேரத்தை சரியான முறையில் நிர்வகிக்க தெரியாதவர்கள் குறிப் பிட்டதொரு நிகழ்வுக்கு பிந்தியே செல்கின்றனர். இதனால் நேரத்தை சரியான முறையில் பயன்படுத்து கின்றவர்களின் நேரமும் வீணாக்கப் படுகின்றது. ஒரு வகையில் பார்த்தால் நேரத்தை நிர்வகிப்பவர் களை அவமதிக்கும் செயலாகவும் இது அமைகின்றது. இத்தகைய தன்மையுடையவர்கள் தம் செயலை நியாயப்படுத்த பொய்சொல்லி தப்பிக்கின்றவர்களாக இருக்கின் றார்கள். இவர்கள் உள நோய்க்கு உட்படுபவராக மாறுகின்றார்கள் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இச்செயல் பழக்கத்தில் ஏற்பட்டால் அது வாழ்நாள் முழுவதும் செய்யத் தூண்டும். இதனால் ஆரோக்கியமாக எதையும் செய்யமுடியாது அவதி யுறும் நிலை ஏற்படும்.

ஒருவரின் வாழ்வை நல்ல முறையில் நெறிப்படுத்த எப்போதும் தெரிந்திருக்க வேண்டும். மாறாக எமக்கு நேரம் போகவில்லை என்று மற்றவர் நேரத்தை மதிக்காது நீண்ட நேரம் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபடுவது ஆரோக்கியமான உறவாக அமையாது. ஆனால் மற்றவர்களும் எம்மைப்போல ஓய்வாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களுடன் ஆக்கபூர்வமான காரியங்களைப் பற்றி உரை யாடுவது மற்றவரிடம் கற்றுக் கொள்ளவும் உதவுகின்றது. இதுவே நல்ல உறவாக மலர்கின்றது.

ரோமானிய சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தியும் தத்துவஞானியுமான மார்க்ஸ் அரேலியஸ் "ஆயிரம் வருடம் வாழப் போவதாக நினைத்துக் கொண்டு செயற்படா தீர்கள்" என்று எச்சரிப்பது நியாய மானது. ஏனெனில் நாம் வாழும் காலம் குறுகியது. அதனை நல்ல முறையில் வீணாக்காது வாழத் தெரிய வேண்டும்.

நிகழ்காலத்தில் நாம் எதனை செய்கின்றோமோ அது தான் நம் எதிர்காலத்தில் நன்மை யாகவும் - தீமையாகவும் வந்து சேர்கின்றது. "எதை விதைக்கின் றோமோ அதைத்தான் அறுக்க முடியும்" எனவே நிகழ்காலத்தை அலட்சியப்படுத்திவிட்டு எதிர்காலத் தில் நன்றாக இருப்போம் என்று நினைப்பது "இலவு காத்த கிளி"யின் கதையாகிவிடுகின்றது

மருந்தில்லா மருத்துவம்
- ராதி -

தன்னடக்கமாக வாழத்தெரிந்த மனிதனே நேரத்தை - காலத்தை திட்டமிட்டு சரியான முறையில் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் காண்கிறான் உள ஆரோக்கியமற்ற மனிதனோ! சந்திகளில் இருந்து பகிடி சேட்சை செய்கின்றவர்களாகவும் - பெண்கள் பின்னே திரிந்து காதலித்து ஏமாற்று பவர்களாகவும் -இடைவிடாது செயல்களில் ஈடுபடுபவர்களாகவும் போதைக்கு அடிமையாகவும் இருக்கின்றார்கள். இவ்வாறு செய்வது அவர்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கின்றது எனினும் தம் வாழ்க்கை அழிந்து போவதனை யும், மற்றவர் வாழ்வுக்கு சிரமத்தை உண்டு பண்ணுவதையும் உணர மறுக்கின்றார்கள். இதனால் தான் இன்று சமுகங்கள் வளர்ச்சி பெற முடியாது போகின்றது. ஆக்கபூர்வ செயலில் ஈடுபடுகின்றவர்களின் செயல்களும் பெறுமதி அற்று மதிப்பிழந்து அவல நிலைக்குள்

செயலில் ஈடுபடுகின்றவர்களின் செயல்களும் பெறுமதி அற்று மதிப்பிழந்து அவல நிலைக்குள் செல்கின்றது.

எனவே எம் வாழ்க்கையை சரியான முறையில் வாழ சில வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். அவை தான்

எம்மை நாமே மீட்டு தற்பரிசோதனை செய்தல்.

ஒரு நாளில் நாம் செய்யும் நன்மையான தீமையான காரி யங்கள் எவை என்பதை பகுத்துப் பார்த்தல்.

அடுத்த நாளுக்குரிய காரியங் களைத் திட்டமிடல்.

ஒரு காரியத்தைச் செய்ய எவ்வளவு நேரம் தேவை என்பதை கணித்தல்.

பல வேலைகள் ஒரே சமயத் தில் வந்து சேருமிடத்தில் எதை முதலில் செய்வது என்று திட்டமிட்டு முக்கியமானதை செய்து முடித்தல்.

தியானத்தில் ஈடுபட்டு மனப்பாரத்தைக் குறைத்தல்.

அந்த அந்த வேலையை அந்த அந்த நாளில் பிற்போடாது செய்து முடித்தல்.

ஓய்வு நேரங்களில் ஆக்க பூர்வமான காரியங்களில் ஈடுபடுதல்.

இவ்வாறு நிகழ்காலத்தில் செய்து கொள்வதினால் எதிர் காலத்தில் நல்ல வெற்றியை காணக்கூடியதாக இருக்கும். எனவே வெற்றியின் பாதையில் வீறுநடைபோட சிறந்த மருந்து நேரத்தை வீணாக்காது நிகழ் காலத்தில் நல்ல விடயங்களை செய்தல்.

நேரத்தை மதிப்பவனை ஒரு பொறுப்புள்ள தலைவனாக சமூகம் மதிக்கிறது.

1ம் பக்க தொடர்ச்சி......

### பலவீனப்பட்டோரின்..........

வெறுமையில் இருந்த எங்களுக்கு நிறைவையும் அன்னையின் ஆவி தந்திருந்தது. அன்னையின் நிமித்தம் கருணாநிலையத்தில் வாழ்பவர்கள் மாத்திரம் அல்ல, கிளிநொச்சியில் மாநகரமே ஒளியைக் கண்டது.

அன்னை தம்மையே தியாகம் செய்து இருளில் இருந்த மக்களுக்கு ஒளியைக் கொடுத்தார். அவர் விதைத்த சிறிய விதையை இன்று செடியாகி விருட்சமாக வளர்ந்து நிற்கின்றது. எனவே நாமும் துரத்துண்டவர்களையும், பலவீனர்களையும், சிதறுண்டவர் களையும் தேடிக் கண்டு பிடித்து அவர்களுக்கு வாழ்வளிப்பதே அன்னைக்கு செய்யும் அஞ்சலி ஆகும். இக்கட்டட பணிக்கு எமக்கு எல்லாவிதத்திலும் உதவிய பேராயருக்கும் ஏனைய அனைவருக்கும் எமது நன்றியை தெரிவிக்கின்றேன் என்றார்.

## சிலந்தியின் கதை

- குட்டிக்கதை -

அக்கா உடனே மத்தேயு நற்செய்தியிலிருந்து வாசிச்சா. அவர்கள் திரும்பிச் சென்றபின் ஆண்டவருடைய தூதர் யோசேப்புக்கு கனவில் தோன்றி 'நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு தப்பி ஓடிச்செல்லும். நான் உமக்குச் சொல்லும் வரை அங்கேயே இரும். ஏனெனில் குழந்தையை ஏரோது கொல்லு வதற்காகத் தேடப்போகின்றான்' என்றார்.

உடனே யோசேப்பு அவசரம் அவசரமாக தாயையும் குழந்தை இயேசுவையும் கூட்டிக்கொண்டு அகதியாக அடைக்கலம் தேடி எகிப்துவுக்கு போக புறப்பட்டார். அப்ப தம்பி நாங்கள் ரிவிரச போரின் போது எம்மை நோக்கி இராணுவம் மெல்லமெல்லமாய் நகரேக்க அவசரம் அவசரமாய் வன்னிக்குப் போன மாதிரி இருக்கு. ஆச்சியும் உண்மைதான் ஏரோதின் இராணுவம் குழந்தை யேசுவை தேடி வரேக்க என்ன செய்யலாம். கொல்லுற வெறியோட இராணுவம் வரேக்க நாம் வீரம் பேசேல்லாது.

எல்லாம் இப்ப மாதிரிக் கிடக்குது. சின்ன மாமா இடம்பெயர்ர ஆட்களுக்கு உதவி செய்ய கம்பஸ் ஆட்களோட போயிற்றார். ஆச்சியும் விடாப்பிடியாக தானும் வருவன் என்று சொல்லி அவசர அவசரமாய்போன மாதிரி 'இந்த நிகழ்ச்சி.

வயதுபோனவர்கள் நோயாளிகளைப் பராமரிக்க பற்றிக்ஸில முகாம் தொடங்கினது எப்பவும் பாராட்டுக்குரியதுதான். வயதுபோன தமது பெற்றோரை விட்டு விட்டு சிலர் போனது படு கேவலமான செயல். நன்றி கெட்ட நடத்தை. பசி பட்டினியாலையும் செல்லடியாலையும் செத்தது ஒருபக்கம். இறுதி சடங்கு கூட இல்லாமல் நாய் இழுத்து திரிஞ்சத நினைத்தால் எவ்வளவு மோசமான அடக்கு முறைக்கு உள்ளானோம் என் மாமா சொன்னார்.

...பிறகு பெரிய பாலை வனத்திற்கூடாக திருக்குடும்பம் போகவேண்டி இருந்தது வெறியோட வந்த ஏரோதின் போர்வீரர்கள் நாலுவயதிற்கு உட்பட்ட எல்லாக் குழந்தைகளையும் பெத்லேகிமிலும் சுற்றுப்புறங்களிலும் வெட்டத் தொடங்கினர். அழுது புலம்பும் சத்தம் தூரத்தில கேட்டபடி இருந்தது. தூரத்தில தூசிப் படலத்தை பார்த்துவிட்டு போர் வீரர்கள் யாரோ ஒரு குடும்பம் தப்பிப் போகினம்போல எண்டு சொல்லி திருக்குடும்பத்தை துரத்தத் தொடங்கினதை யோசேப்பு கண்டு விட்டார். குழந்தையைக் காப்பாற்றுவம் என்று சொல்லிக் கொண்டு அங்கு தெரிந்த குகையில் போய் ஒளிந்து கொண்டார்.

### -சாமியார்-

நல்ல வடிவான தாயும் குழந்தையையும் கண்ட சிலந்தி ஆண்டவர் என்ர குகைக்கு வந்திட்டார் நான் என்ன கைமாறு செய்யப்போறன் எண்டு சொல்லி சந்தோசத்தில நல்ல வடிவான பெரிய வலையை பின்னி என்ர மகிழ்ச்சியை தெரிவிப்பன் உடனே சிலந்தி அங்கும் இங்கும் பாஞ்சு நல்ல பெரிய வலையைப் பின்னி வாசலை மூடி மறைத்தது. குழந்தையை தேடி வந்த போர்வீரர் வாசல்ல பெரிய சிலந்தி வலையை கண்டு உள்ளே போகமுடியாமல் இருப்பதைக் கண்டனர். சிலந்தி வலை வாசலை மூடியிருப்பதால் உள்ளே யாரும் போயிருக்க முடியாது எனச் சொல்லிக்கொண்டு திரும்பிப் போனார்கள். அவர்கள் இவ்வாறு சொல்லிக்கொண்டு திரும்பிப் போனதைக் கண்டு புனித யோசேப்பும் மரியாவும் கடவுளைப் போற்றினர். இந்தக் கதை நற்செய்தியில் இல்லை என தம்பி சொன்னான். ஏவப்பட்ட நூல்ல இல்லைதான் ஆனால் யேசுவின் குழந்தைப் பருவம் பற்றி பல முன் நற்செய்திகள் என்று சொல்லும் நூல்கள் பல இருக்குது. அதில ஒன்றிலதான் இக் கதை இருக்கு. ஆண்டவருடைய அருட்கரம் எப்பவும் வழிநடத்தும் என ஆச்சி சொன்னா.

## புகழ் வேண்டும் நெஞ்சே....!

எங்கும் நிறைந்த பொருள்
என்னுள் உறங்கிக் கிடக்கு.
மனமே.....!
தூக்கம் கலைத்து
எழுப்பிட உதவு
பெருமை யென்று
நீ நினைக்கும் அத்தனையும்
உனக்கது நல்கும்

நீயோ....
குறுக்கு வழியில் புகழ் தேடி.
யென்னைக்
கிறுக்கனாக்கப் பார்க்கிறாய்

மணவீட்டில் மணமகனாய்
மரணவீட்டில் பிணமாய்
இன்னும்
மாலைகள் விழும் இடம் தோறும்
நீக்கமற நானே
என்ற
எண்ணச் சிறகை விரித்து
நாளும்
என்னைக் கொல்கிறாய்

மனமே....!
கணத்திற்கு கணம்
குரங்கின் தாவல் எனப்
பாயும் - உன்
உதவாத பழக்கத்தை நிறுத்து
உன்
கடிவாளத்தை என்கையில்
தந்துவிடு.
பெருமையென்று
நீ நினைக்கும் அத்தனையும்
உன்
காலடியில் வற்றாத
பீப்பாக்களில்
சுரந்த வண்ணம்
கிடக்கும்.

நா. நவராஜ்

## ஒரு கப் தேனீர்

மலையகப் பகுதியில் வாழும் மக்களின் அயராத உழைப்பும் தளராத முயற்சியும் தான் தாகம் தீர்க்கும் தேனீராகும்.

வெய்யிலிலும், மழையிலும் தம் உடலை அர்ப்பணித்து உழைக்கும் உழைப்புத்தான் உற்சாகம் கொடுக்கும் தேனீராகும்.

எத்தனையோ அட்டைகள் உடலைக் கடிக்க அத்தனையும் பொறுமையோடு சகித்து இரத்தம் சிந்தித் தருவதுதான் தாகம் தீர்க்கும் தேனீராகும்.

ஏழைகளின் மத்தியில் இயேசு இருக்கின்றார். இல்லையென்றால் மலைகள், குன்றுகள் ஒளி தமது உடல் உழைப்பால் இந்த நாட்டை உயர்த்த முடியாது. ஒரு கப் தேனீருக்குள் இத்தனை கதையா!

ஆகவே தேனீரைப் பருகும் நாம் ஒரு விசை அவர்களையும் மனந்திறந்து பார்ப்போம்.

அவர்கள் வாழ்க்கை சிறக்கவும்இ அவர்கள் உரிமை கிடைக்கவும், அடிமைவாழ்வு விலகவும், நாம் அருந்தும் தேனீரை அற்பமாய் எண்ணாமல் அவர்களுக்காய் இறைவனிடம் பிரார்த்திப்போம்.

சகோ.மு.குணசேகரம்
தெனியாய.

## தெளிவுப் பெட்டகம்

### "தெளிவு" கிடைத்தது.

ஆன்மீகத் தேடல் வளர, உள்ளத்தில் தெளிவு ஏற்பட; தெளிவு உதவட்டும். தெளிவு கிடைத்து மகிழ்வுற்றோம். வெளியிடும் தங்களுக்கும் வாசிக்கும் அனைவருக்கும் தெளிவு ஏற்படட்டும். ஆக்கங்கள் அனைத்தும் அருமையானவை- ஆச்சிரம உறவுகள் வலுப்பட தெளிவும் உதவட்டும். அநேகருக்கும் பயனுடையதாய் அமையட்டும்.

ஆண்டவர் ஆசீர்வதிப்பார்.

க.குழந்தைவேலு
கிறிஸ்து சேவா ஆச்சிரமம்
கிரான் - மட்டக்களப்பு.

### உண்மை பேசுவது சாதனையே

தெளிவுப் பத்திரிகை கிடைத்தது! நன்றிகள். நாடு கலங்கி குழம்பி இருக்கும் வேளை தெளிவாக உண்மை பேசுவது சாதனையே! அவ்வகையிலே தெளிவுப் பத்திரிகை நாட்டுக்கும் சமயத்திற்கும் மொழிக்கும் பணிபுரிவதை இட்டு பேருவகை அடைகின்றேன்.

உங்கள் "தெளிவு" கலங்காமல் கண்ணியமாக வெளிவர எனது ஆசீர்வாதங்களுடன் கூடிய வாழ்த்துக்கள்.

வண.பிதா. H. N. ஏபிரகாம்
ஆசிரியர் - அருள்ஊற்று.
தலவாக்கலை.

### சிறப்பாக அமைந்துள்ளது!

தெளிவு பத்திரிகை கிடைத்தது. அதில் எமது "நீரோடை" பத்திரிகையை அறிமுகம் செய்துள்ளீர்கள் அதற்கு எனது நன்றிகள். அத்துடன் இம்முறை பத்திரிகை சிறப்பாக அமைந்துள்ளது பாராட்டுக்கள். எனினும் தொடர்ந்தும் பலரை கவரும் வண்ணம், பல விடயங்களை சிறப்பாக எடுத்துச் சொல்ல வாழ்த்துகிறேன்.

வண. ச. தொபியாஸ்
ஆசிரியர் - நீரோடை
கந்தசேன, நமுனுகுல.

சின்னஞ் சிறியோரை என்னிடம் வரவிடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பம்: 23 யன் 2001 செண்.ஜேம்ஸ் ஆலயம், நல்லூர்